கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்
www.newwisdomministries.com
ஞானம் 5 – ஒலி 27
03-07-2022



## எல்லா வெற்றிகளும் என் தாய்க்கே...

தலையங்கம்

# நன்மை செய்யும் நல்ல உள்ளம் வேண்டும்



அருட்பணி.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான என் அன்புச் சகோதர, சகோதரிகளே, ஞான ஒலியின் அருமையான வாசக அன்பர்களே வணக்கம். இந்த ஜுலை மாதம் உங்களுக்கு மகிழ்ச்சியான மாதமாக அமைய வாழ்த்துகின்றேன்.

உறவுகள் இணைபிரியாதிருக்க வைக்கும் சக்திகளில் நன்றியுணர்வுக்கே முதலிடம். ஏனென்றால் ஒவ்வொரு உயிரும் மற்ற உயிர்களின் உதவியின்றி வாழ முடியாது. ஒருவருக்கு நன்றியுணர்வு எவ்வளவு இருக்கின்றதோ அந்தளவுக்கு அந்த உயிர் மதிக்கப்படும். நன்றியற்றவர்களை யாரும் சீந்தக்கூடமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களின் வாசலை நாடிச் செல்லக்கூடாது என்பதைத்தான், பிறர் செய்த உதவிகளை....மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று நம் முன்னோர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு – குறள் 110

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள் கூறியிருக்கின்றார்.

எதை வேண்டுமானாலும் மறக்கலாம் ஆனால் நமது நன்மைக்காக ஒருவர் செய்த உதவி மிகமிகச் சிறிதாயினும் நாம் அதை எக்காலத்திலும் மறக்கவே கூடாது என்று அவர் கூறுகின்றார். அப்படிப்பட்டவர்களை என்றும் நன்றியோடு மதித்து வாழும்போதும், அவர்களுக்கு நாம் பதில் அன்பு செலுத்தும்போதும், நமக்கு உதவியவர்களின் உள்ளம் எவ்வளவு மகிழ்கின்றதோ அந்தளவுக்கு நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரி வார் – குறள் 104

அதாவது, நன்றியுடையவர்கள் யாரெனில், ஒருவர் செய்த உதவி மிகச் சிறிதாயினும், அதை பனையளவு உயர்வானதாக மதிக்கின்றவர்கள்.

மாண்புடைய நல் உள்ளங்கள் யாரெனில் தாங்கள் செய்த உதவிகளை உடனே மறப்பவர்கள். எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் உதவுகின்றவர்கள்.

பல காலத்துக்குப் பிறகு உதவியவர்களுக்கு நன்றி சொல்கின்றபோது, என்னங்க அதையெல்லாம் பெரிசா நினைச்சுப் பேசுறீங்க... எனக்கு அது ஞாபகமே இல்லைங்க... பரவாயில்லைங்க. நல்லாயிருங்க என்று அவர்கள் சொல்வதை நாம் பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட ஆன்மாக்களே தெய்வப் புதல்வர்கள்.

அவ்வாறு நமது நன்றியுணர்வை உணர்ந்து, நல்லாயிருங்க என்று அவர்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள், நம்மை மேலும் ஆசீர்வாதத்தோடு வாழவைக்கும்.

அதைத்தான் இயேசுவும் எதிர்பார்க்கின்றார். லூக்கா நற்செய்தி 17:11-19 வரையுள்ள பகுதியில், பத்துத் தொழுநோயாளிகள் தங்களைக் குணமாக்க

வேண்டும் என்று கேட்டபோது, அவர்களை குணமாக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், அவர்களின் நன்றியுணர்வை சோதிக்கும் நோக்கத்துடனும், இன்னும் சிறப்பாக இறைவனும், சக மனிதர்களும் செய்கின்ற உதவிகளை மறவாது என்றும் நன்றியுணர்வோடு இருக்க வேண்டும் என்ற படிப்பினையை நமக்கும் கற்றுத் தருவேண்டும் என்பதற்காக, இயேசு அந்தப் பத்துத் தொழுநோயாளிகளைப் பார்த்து

நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் காண்பியுங்கள் – லூக்கா 17:14 என்று கூறினார்.

அவ்வாறே அவர்கள் புறப்பட்டுப் போகும்போது அவர்கள் நோய் நீங்கியது. அவர்களுள் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்தக் குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியர்.

இயேசு அவரைப் பார்த்து பத்துப் போர்களின் நோய் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே?

கடவுளைப் போற்றி புகழ, அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே? என்றார். – லூக்கா 17:14-18

இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற ஒரே ஒரு காணிக்கை நன்றிக் காணிக்கையை மட்டுமே.

அதையேதான் புனித பவுலடியார் அவர்கள் நன்றியுணர்வும், இறைவேண்டலும்,மகிழ்ச்சியும் எப்போதும் இணைந்தே இருக்கும் என்று சொல்கின்றார். நன்றியுடையவர்கள், உதவியவர்களுடன் நல்லுறவில் என்றும் இருப்பார்கள். அதனால் அவர்களின் மகிழ்ச்சி என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை கீழ்வரும் இறைவசனத்தில் கூறுகின்றார்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இறைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே. – 1தெசலோனிக்கர் 5:16-18

நாம் செபிக்கும்போது இறைவனிடம் அதைக் கொடு இதைக் கொடு என்று கேட்டுக் கொண்டே இருப்போம். அதுதான் செபம் என்று நினைக்கின்றோம்.

செபம் என்பது பிச்சை எடுப்பதற்கல்ல, மாறாக அனைத்திற்கும் இறைவனுக்கு நன்றி சொல்தற்காகத்தான். ஏனென்றால், இதுவரை நாம் பெற்றது அனைத்தும் இறைவன் கொடுத்ததே, அதேபோல இனிமேல் நமக்குத் தேவையானது அனைத்தையும் அவரே சரியான நேரத்தில் தருவார் என்ற நம்பிக்கை, கடவுளை எப்போதும் நன்றியோடு ஆராதிக்க வைக்கும்.

கடவுளின் அன்புக்கு நன்றியாக நாம் அவருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை நன்றியும், போற்றுதலும், ஆராதனையும் மட்டுமே. ஆகவேதான் இயேசு கிறிஸ்து நன்றியோடு திரும்பி வந்த அந்த குணமான முன்னாள் தொழிநோயாளியைப் பார்த்து,

கடவுளைப் போற்றி புகழ, அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே?

என்று கூறினாரென்றால், அவர் மனிதரிடமிருந்து நம்மிடம் எதிர்பார்ப்பது, நன்றி, நன்றி, நன்றி மட்டுமே. அந்த நன்றியுணர்வே நம்பிக்கைக்கு அடித்தளமாகும். அதுவே நம் மீட்புக்கு வாசல்.

ஆயினும், மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ? – லூக்கா 18:8

என்று கூறிய இயேசு நாம் கடவுளுக்கும் மனிதருக்கும் என்றும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று அழைக்கின்றார்.

போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவை உலகமே கொண்டாடுகின்றது. கால்பந்தாட்டத்தில் அவர் அடித்த வெற்றிக் கோல்களுக்காக அல்ல மாறாக அவரின் தாய்ப் பாசத்திற்காகத்தான்.

உலகிலேயே அதிகமாக சம்பளம் வாங்கும் கால்பந்தாட்ட வீரர் அவரே என்று ஃபோர்ப்ஸ் அப்போது பத்திரிக்கை அறிவித்தது. அவரது கால்பந்தாட்டத்தில் மட்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள் சம்பாதித்தார் என்று அறிவித்தது. கோல்டன் பூட் பரிசும் பெற்றவர். ஆனால் அவரது தனிப்பட்ட வாழ்வில் அவர் தனது தாயை அளவுக்கதிகமாக நேசித்தார். அதுவே உலக மக்களின் மனதில் நீங்கா இடம் பிடிக்கக் காரணமாகும்.

அவர் தன் தாயை தன்னோடே வைத்து பாராமரித்து வந்தார். ஏன் அவருக்கு தனியாக ஒரு

வீடு கட்டி அவரை அங்கு வைத்திருக்காமல் அவரை உங்கள் குடும்பத்தோடவே வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டபோது...அவர்..நான் என் வாழ்வில் உயர்வதற்காக முக்கியமாக நான் கால்பந்து விளையாட்டில் புகழ் பெற என் தாய் செய்த தியாகங்கள் அளவிட முடியாதது. என்னை சாப்பிட வைத்துவிட்டு பல இரவுகள் என் தாய் பட்டினியாகவே படுப்பார்கள். முதன்முதலாக எனக்கு ஒரு கால்பந்தை வாங்கித் தருவதற்காக பல நாட்கள் தனது வேலை நேரம் முடிந்தபிறகு மாலை நேரங்களில் உணவு விடுதிகளில் பாத்திரம் கழுவும் வேலையையும் செய்தார்கள்.

நான் கால்பந்தாட்ட வீரனாவதற்கும், இப்போது நான் வெற்றி பெறுவதற்கும் அவரின் பங்களிப்புதான் காரணம். அந்த அன்பை நான் எப்போதும் மறக்கவே மாட்டேன். என் வெற்றிகளின் மூலமாக உலகம் அறிய நான் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன். எனது அனைத்து வெற்றிகளையும் என் தாய்க்கே சமர்ப்பிக்கின்றேன். அவருக்கு நான் என்றும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன். அதனால்தான் என் தாயை என்னோடு என் குடும்பத்தோடு வைத்திருக்கின்றேன். என் சிறு வயதில் அவர் செய்த அனைத்துத் தியாகத்திற்குப் பதிலாக அவருக்கு மிகச் சிறந்த வாழ்க்கையை நான் அளிக்க விரும்புகின்றேன். அவரில்லை என்றால் நானில்லை என்று சொன்னார்.

உலகமே போற்றும் கால்பந்தாட்ட வீரர், கிறிஸ்டியானோ ரொனால்டோவை நமக்களித்த அவரது தாய் மரிய டோலாரஸ் டோஸ் சான்டோஸ் அவைரோ அவர்களுக்கு புகழ் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோம்.

அதோடு நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய நமது தாய், தந்தை, மேலும் மற்ற அனைவரையும் நன்றியோடு வணங்குவோம். புகழ் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

நன்றி மறந்த இந்த உலகத்தில், நன்றியுணர்வை நமக்குள் உயிர்தெழ வைப்போம். யார் நன்றியுடையவர்களாக இருந்தாலும், இல்லை என்றாலும், நாம் நன்றியோடு இருப்போம். நமது இன்றைய நிலைக்குக் காரணமான அனைவருக்கும் என்று நன்றி கடன் செய்வோம். அதோடு நாமும் பிறருக்கு உதவி செய்வோம். யார் நன்றி சொன்னாலும், மறந்தாலும் நாம் நன்மைகளைச் செய்து கொண்டே இருப்போம். ஏனென்றால் நாம் இயேசுவின் பிள்ளைகள்...புனித பேதுரு சொன்னதுபோல இயேசுவைப் போல நாம் நன்மைகள் செய்து கொண்டே செல்வோம்.

கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து, எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். - திருத்தூதர் பணி 10:38

இவ்வாறு நீங்கள் நன்மையைச் செய்ய முன்வருவதன் மூலம், மதிகெட்ட அறிவிலிகளை வாயடைக்கச் செய்ய வேண்டுமென்பதே கடவுளின் திருவுளம். - 1 பேதுரு 2:15

நல்லவருக்கும், நல்லல்லாதவருக்கும் நன்மை செய்வதே நன்றியுள்ளத்தின் பண்பு. அதுவே இறைப்பண்பு, கடவுளின் திருவுளம்.



**He who is humble easily obeys everyone, fears to offend anyone, is at peace with everyone, is kind with all.**

Saint Thomas the Apostle



# விவிலியம் அறிவோம் – 45

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யூதா மற்றும் தாமாரின் கதை

தொடக்க நூல் 38 வது அதிகாரத்தின் கதாநாயகனாக யூதா வருகிறார். மேலோட்டமாகப் பார்த்தால் இந்தப் பிரிவுக்கும் யோசேப்பு கதைக்கும் தொடர்பில்லாதது போலத்தெரியலாம்; ஆனால் ஆழமாகச் சிந்தித்தால் யோசேப்பு கதைக்கும் யூதாவைப் பற்றிய இந்தக்கதைக்கும் தொடர்பு இருப்பது தெரியவரும். வரலாற்றைப் பார்க்கும்போது இஸ்ரயேலின் பன்னிரு குலங்களில் யூதா மற்றும் யோசேப்பின் குலங்கள் தான் மற்ற குலங்களைக் காட்டிலும் முன்னணியில் உள்ளன. இந்த இரண்டு குலங்களும் ஏனைய குலங்களின்மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவேதான் பழங்கால மரபுகள் அனைத்தும் இந்த இரண்டு குலங்களைப் பற்றியே அதிகமாகப் பேசுகின்றன. மற்ற குலங்களைப் பற்றி விவிலியம் அதிகமாகப் பேசவில்லை. வரலாற்றுக் குறிப்புகளிலும் ஏனைய குலங்களைப் பற்றியபதிவுகள் குறைவு.

சகோதரர்கள் ஒன்றிணைந்து யோசேப்பை கொன்று ஆழ்குழியில் போடுவதற்கு முடிவெடுத்தபோது யோசேப்பைக் கொல்ல விடாமல் தடுத்து, அவரை மிதியானியர்களிடம் விற்றதில் யூதாவிற்கு பெரும் பங்குஉண்டு. அந்த நிகழ்விற்குப் பிறகு யூதாதன் சகோதரர்களை விட்டுப் பிரிந்து அதுல்லாம் என்னும் இடத்தில், அவரது நண்பரான ஈரா என்பவருடன் குடியிருக்கிறார். அங்கே சூவா என்ற கானானியன் ஒருவனின் மகளை மணந்து அவளுடன் வாழ்கிறார். யூதாவின் மூதாதையர்கள் வரலாற்றைப் பார்க்கும்போது, குறிப்பாக அவரது தந்தையான யாக்கோபு, மற்றும் அவரது முன்னோர்கள் கானானியப் பெண்களை மணப்பதை விரும்பவில்லை. அவர்களின் இனத்தைச் சார்ந்த பெண்களையே மணந்தனர். யூதாவின் காலத்தில் கானானியப் பெண்ணை மணப்பது தவறாகப் பார்க்கப்படவில்லை எனத் தெரிகிறது. யூதாவுக்கு அவள் வழியாக மூன்று புதல்வர்கள்; பிறக்கின்றனர். முதல் புதல்வனின் பெயர் ஏர். இரண்டாவது புதல்வனின் பெயர் ஓனான். மூன்றாவது புதல்வனின் பெயர் சேலா. முதல் புதல்வனான ஏர் இளைஞனானபோது தாமார் என்ற ஒரு கானானியப் பெண்ணை மணக்கிறான். திருமணத்திற்குப் பின் ஏர் அதிக நாள்கள் வாழவில்லை. ஏர் ஆண்டவர் முன்னிலையில் கொடியவனாய் இருந்ததால், ஆண்டவர் அவனைச் சாகடித்தார் என38:7 இல் கூறப்படுகிறது. அவன் செய்த கொடுமைகள் அல்லது அவனது பாவங்கள் என்ன என்பது கூறப்படவில்லை.

யூதா தனது இரண்டாவது புதல்வனான ஓணானிடம் தனது அண்ணியான தாமாருடன் கூடிவாழ்ந்து சகோதரக் கடமையைச் செய்யப் பணிக்கிறார். இங்கே சகோதரக் கடமை என்றால் என்ன? என்ற கேள்வி எழலாம்;. திருமணம் புரிந்த ஒரு சகோதரன் குழந்தையில்லாமல் இறந்துவிட்டால் அவனது சகோதரன் இறந்தவனுடைய மனைவியை மணம் புரிய வேண்டும். அவர்களுக்குப் பிறக்கும் ஆண் தலைப்பேறு இறந்துபோனவனுடைய குழந்தையாகக் கருதப்படும். அவனுடைய வழிமரபு அந்தக் குழந்தையின் வழியாகக் கடத்தப்படும். இச 25:5-10 இச்சட்டத்தைப் பற்றிவிரிவாகக் கூறுகின்றன. சகோதரக் கடமை என்ற மரபின் பின்புலத்தையும் அறிந்து கொள்வது நல்லது. பண்டைய காலத்தில் கைம்பெண்கள் அதிகமாக வாழ்ந்தனர். போரின் காரணமாக, அல்லது நோயின் காரணமாக ஆண்கள் அதிகமாக இறந்தனர். இதனால்



சமூகத்தில் கைம்பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இந்தநிலமையைச் சரிசெய்வதற்காக இஸ்ரயேலில் சகோதரக் கடமை என்ற மரபு ஏற்படுகிறது. இதன் வழியாக கைம்பெண்கள் மறுமணம் செய்யமுடிந்தது, மேலும் இறந்துபோன கணவனுக்கு வழிமரபும் உருவாகிறது.

யூதாவின் கட்டளைப்படி ஓணான் தாமாருடன் கூடிவாழ்ந்து அவனது மூத்த சகோதரனான ஏர் என்பவனுக்கு வழிமரபு தோன்றச் செய்யவேண்டும். ஓணான் அவளுடன் கூடிவாழ்கிறான்; ஆனால்தன் சகோதரனின் மனைவியைக் கருத்தரிக்கச் செய்யவிரும்பவில்லை. அவளுடன் உறவுகொள்ளும் போதெல்லாம் தன் விந்தை தரையில் சிந்துகிறான். ஓணான் அவ்வாறு செய்வதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, அவளுக்குப் பிறக்கும் தலைமகன் அவனது சகோதரனின் வழிமரபாகக் கருதப்படும்; ஓணானின் வழிமரபாக இருக்காது. இரண்டாவதாக, தனது சகோதரனுக்கு வழிமரபு வருகின்றபோது அவனுக்குக் கிடைக்கின்ற உரிமைச் சொத்து குறையக்கூடும். ஓணானின் செயல் ஆண்டவர் முன்னிலையில் தவறானதாகக் கணிக்கப்படுகிறது. எனவே ஆண்டவர் அவனையும் சாகடிக்கிறார். யூதாவுக்கு இளைய மகன் சேலாமட்டும் மிஞ்சுகிறான். அவனும் சிறுவன். எனவே யூதாதம் மருமகளான தாமாரை நோக்கி, என் மகன் சேலா பெரியவனாகும் வரை உன் தந்தை வீட்டில் விதவையாய்த் தங்கியிரு எனக் கூறித் தந்தையின் வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றார். தாமாரும் தன் தந்தையின் வீட்டிற்குச் சென்று கைம்பெண்ணுக்குரிய ஆடையை அணிந்து தங்கியிருக்கிறாள். யூதா தன் இளையமகன் சேலாவையும் இழக்க விரும்பவில்லை என்பதுதான் தாமாரைத் அவளது தந்தையின் வீட்டிற்கு அனுப்புவதற்கான முக்கியக் காரணம்.

தாமார்தன் தந்தையின் வீட்டில் தங்கியிருந்தாலும் சட்டப்படி அவள் யூதாவின் மருமகள்; எனவே அவள் வேறு திருமணம் செய்துகொள்ள முடியாது. யூதா அவளுக்கு திருமண விலக்கு கொடுத்து அவள் வேறு ஒருவனை மணந்து வாழச் செய்யமுடியும். அவர் ஏனோ அதைச் செய்யவில்லை. எனவே தாமாரின் நிலைமை மோசமாகிறது. அவள் தந்தையின் பாதுகாப்பிலும்; இல்லை; மாமனாரின் பாதுகாப்பிலும் இல்லை. நாள்கள் நகர்கின்றன. யூதாவின் மனைவி இறக்கிறாள். இளைய மகனான சேலாவும் வளர்கிறான். ஆனால் யூதா அவனை தாமாருக்குக் கணவனாகக் கொடுக்கவில்லை. எனவே தாமார் தனது மாமனாரின் கடமையைப் புரியவைக்க முயற்சிக்கிறாள். யூதா தனது மந்தைகளுக்கு உரோமம் கத்தரிப்பதற்காக தனது அதுல்லாமிய நண்பனான ஈராவுடன் திம்னா என்னும் இடத்திற்குச் செல்கிறார். இதை அறிந்த தாமார் கைம்பெண்ணுக்குரிய உடைகளைக் களைந்துவிட்டு, விலைமாதுவேடம் தரித்து திம்னாவுக்குச் செல்லும் வழியில் அமர்கிறாள். கனானியர்களின் கலாச்சாரத்தில் பெண்கள் விலைமாதுக்களாக வாழுகின்ற பழக்கம் இருந்தது. குறிப்பாக இஸ்தார் மற்றும் அனாத்து போன்ற தேவதைகளின் கோவில்களில்



தேவதாசிகளாக பணிபுரிந்த பெண்கள் விலைமாதுக்களாகவும் செயல்பட்டனர். இந்தத் தேவதைகளின் பக்தைகள் கோவில்களின் அருகிலேயே குடியிருப்பர். அவர்கள் பாகால் அல்லது எல் என்ற கடவுளர்களின் மனைவியராக கருதப்படுவர். இந்தத் தேவதைகளின் கோவில்களுக்கு வருகின்ற ஆண் பக்தர்கள், வயல் நடுதல், ஆடுகளின் உரோமம் கத்தரித்தல் போன்ற கால கட்டங்களில், இந்த விலை மாதுக்களுடன் உடல் உறவுகொள்வர். இந்தப் பழக்கம் தெய்வீகத் திருமணம் என்றழைக்கப்பட்டது. இதன் வழியாக அவர்களின் பயிர்கள் மிகுந்த பலனைக் கொடுக்கும்; மந்தைகள் பலுகிப் பெருகும் என அவர்கள் நம்பினர்.

திம்னா செல்லும் வழியில் அமர்ந்திருந்த தாமாரை யூதா காண்கிறார். அவள் முக்காடிட்டு இருந்ததால் அவளை விலைமாது என நினைத்து அவளுடன் உடலுறவுகொள்ள விரும்புகிறார். அவளுடன் உடலுறவு கொள்வதற்கு ஒரு ஆட்டுக்குட்டியைப் பரிசாக அனுப்புவதாகக் கூறுகிறார். ஆட்டுக்குட்டி அவளது கையில் வருவது வரை, அடையாளமாக அவரது முத்திரை மோதிரத்தையும், இடைவாரையும் கைக்கோலையும் தாமார் கேட்கிறாள். யூதாவும் அதற்குச் சம்மதித்து அவற்றை அவளுக்குக் கொடுக்கிறார்; அவளுடன் உடலுறவு கொள்கிறார். முத்திரை மோதிரங்களும்





கைக்;கோல்களும் அவையாருக்கு சொந்தமானவை என்பதைக் குறிக்கும் அடையாங்களைக் கொண்டதாக இருந்தன. யூதாவுடன் உடலுறவு கொண்டதன் காரணமாக தாமார் கருத்தரிக்கிறார். யூதா தான் கூறியபடி ஒரு ஆட்டுக்குட்டியை தனது நண்பனான ஈரா மூலமாக அனுப்பி வைக்கிறார். ஈரா அங்கு சென்றபோது அப்படியொரு விலைமாது அங்கே இருப்பதாகத் தெரியவில்லை. மூன்று மாதங்கள் கடந்தபிறகு தாமார் கருத்தரித் திருப்பதாக யூதா அறியவருகிறார். அவள் மீது ஆத்திரம் கொள்கிறார். அவளை இழுத்துக்கொண்டு வாருங்கள்; அவள் எரிக்கப்பட வேண்டும் எனக் கோபத்தில் கூறுகிறார். அவள் இழுத்துக் கொண்டு வரப்படுகின்றபோது அவளிடமிருந்த முத்திரை மோதிரத்தையும் இடைவாரையும் கைக்கோலையும் காட்டி இவை யாருக்குச் சொந்தமோ அவரால் தான் நான் கருவுற்றிருக்கிறேன் எனக் கூறுகிறாள். அவைகளைக் காணும் யூதா தனதுதவற்றை உணர்கிறார்.

அவர்களின் வழக்கப்படி யூதா தனது மகன் சேலாவை தாமாருக்கு மணம் முடித்து வைத்திருக்க வேண்டும். அவர் அதைச் செய்யவில்லை. எனவே தாமாரின் செயல் நேர்மையான செயலாகப் பார்க்கப்படுகிறது. மறைநூல் யூதாவையும் தாமாரையும் குற்றவாளிகளாகப் பார்க்கவில்லை. தாமாரைப் பற்றிக் கூறுகையில், அவள் என்னைவிட நேர்மையானவள் என யூதா கூறுகின்றார். யூதாவைப் பொறுத்தவரையில், அதற்குப் பின் அவர் அவளோடு உடலுறவு கொள்ளவில்லை



என விவிலியம் கூறுகிறது. இறந்துபோன தனது கணவருக்கு ஒரு வழிமரபை ஏற்படுத்துவதற்குத் தேவையானதைத் தாமார் செய்கிறாள். யூதா தனது கடமையிலிருந்து தவறியவராகக் காட்டப்பட்டாலும் தனது தவறை ஏற்றுக் கொள்கிறார்; அதற்கேற்றவாறு வாழ்வை மாற்றுகிறார். தாமார் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார். குழந்தைகள் பிறப்பதற்கு முன் தாமாருடைய வயிற்றில் நடக்கும் குழந்தைகளின் போராட்டம் ரெபேக்காவின் வயிற்றில் அவரது குழந்தைகளான ஏசா மற்றும் யாக்கோபின் போராட்டத்தை நினைவுபடுத்துகிறது (தொநூ 25:21-26). எதிர்காலத்தில் அவர்களுக்கிடையே நடக்க இருக்கின்ற போராட்டத்தை இதுகுறித்துக் காட்டுவதாக உள்ளது. ஒருவர் அடுத்தவர் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கான போராட்டம் இது. அவர்கள் பிறக்கும் விதத்தை வைத்துதான் அவர்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. தனது சகோதரனை தள்ளிவிட்டு முதலில் வெளிவந்த குழந்தை பெரேட்சு என அழைக்கப்படுகிறது. மருத்துவப் பெண்மணியால் குழந்தையின் கையில் கட்டப்பட்ட சிவப்பு நிற நூலுடன் பிறக்கும் குழந்தை செராகு என அழைக்கப்படுகிறது. தாமாரின் துணிச்சலான செயல் யூதாவின் வழிமரபு அழியாமல் காக்கப்படுவதற்கு உதவுகிறது. பிற்காலத்தில் இந்த வழிமரபில்தான் தாவீது அரசர் வருகிறார். மத்தேயு எழுதிய நற்செய்தியில் இயேசுவின் மூதாதையர்கள் வழிமரபுப் பட்டியலில் தாமாரின் பெயரும் வருவது (மத்தேயு 1:3) இங்கே நினைவு கூரத்தக்கது.

நண்பர்களே! விவிலியத்தில் பெண்கள் சிறப்பாகப் பேசப்படுவது மிகவும் அபு+ர்வம்; பெண்கள் சிறப்பாகப் பேசப்படும் போதேல்லாம் மனித நேயத்தில் வாழ்வதற்கு ஆண்களுக்கு கற்பிப்பவர்களாக அவர்கள் வருகிறார்கள்;. இப்பிரிவில் தாமாரும் அவ்வாறுதான் காட்டப்படுகிறாள். யூதா தனது வாழ்வைப் பற்றி ஆழமாகச் சிந்தித்து மாற்றிக்கொள்வதற்குக் காரணமாக தாமார் செயல்படுகிறார் (38:26). மேலும் தனது முதல் கணவனான ஏர் என்பவனின் பெயரைச் சொல்ல ஒரு மகனைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற அவரது எண்ணம் சிறப்பானதாகப் பார்க்கப்படுகிறது. யூதா மற்றும் தாமார் வாழ்வில் நடந்த இந்த நிகழ்வை வாசிக்கும் நமக்கு பாலியல் ஒழுக்க நெறிகள் பற்றிய கேள்விகள் எழலாம். இங்கே ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்பிரிவில் வருகின்ற மனிதர்கள் ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள். அவர்களின் ஒழுக்க நெறிகளும், பண்பாடும் வித்தியாசமானவை. அவற்றை இன்றைய பாலியல் ஒழுக்க நெறிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுதவறு. இந்தப் பிரிவின் வழியாக விவிலிய ஆசிரியர் பதிவுசெய்ய விரும்புவது பாலியல் ஒழுக்கத்தைப் பற்றிய கருத்தல்;ல மாறாக கடவுள் யாக்கோபிற்குக் கொடுத்த வாக்குறுதி, யூதா மற்றும் அவருடைய வழிமரபினர் வழியாகக் கடத்தப்படுகிறது என்பதைக் காட்டுவதுதான். வரலாற்றில் கடவுள் செயல்படும் விதம் வியப்பானதாகவே உள்ளது.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF







# மறையுரை

அருட்பணி. ராபர்ட்
உதவிப்பங்குத்தந்தை,
புனித விண்ணேற்பு அன்னை ஆலயம்
மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

பொதுக்காலம் 14-ம் ஞாயிறு

03-07-2022

**தி.ப. 10:24,35 / எபே. 2:19-22 / யோவா 20:24-29**

## அனைவருக்கும் நற்செய்தி

அரசியல்வாதி ஒருவர் செங்கோட்டையில் கொடியேற்றிய பிறகு அங்கு கூடியிருந்த மக்களுக்கு உரையாற்றினார். சர்வதேச அளவில் நமது நாடு வலிமையான நாடாக மாறி 6-வது இடத்தை பிடித்ததாகவும் பெருமிதப்பட்டுக்கொண்டார். தன்னுடைய எதிர்க்கட்சியினைரையும் அரசியல் எதிரிகளையும் Reform - Perform - Transform என்ற தாரக மந்திரத்தால் வெற்றிக்கொண்டுள்ளேன் என்றும் கூறினார். தனது ஆட்சிக்காலத்தில் தனது அரசு செய்த அனைத்து சாதனைகளையும் பட்டியலிட்ட அவர் அடுத்தஆண்டு இறுதிக்குள் அனைவருக்குமான நான் அனைவருக்கும் வீடு அனைவருக்கும் மின்சாரம் அனைவருக்கும் அனைத்து வசதிகள் என்னும் திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவருவதாக உறுதியளித்தார். இவரைப்போலவே நிறைய அரசியல்வாதிகள் நாட்டுத்தலைவர்கள் மற்றும் வரலாற்று தலைவர்கள் பலவகையான நலத்திட்டங்கள் அனைவரையும் சென்றடையவேண்டும் என முயற்சித்திருக்கின்றனர். ஆனால் இதுவரை யாரும் வெற்றியடைந்ததாக சரித்திரமில்லை.

இப்படிப்பட்ட மனிதர்கள் மத்தியில் வரலாற்று நாயகன் இயேசுகிறிஸ்து அனைவருக்கும் நற்செய்தியை எடுத்துச்செல்லும் திட்டத்தில் இன்றளவும் வெற்றிக்கண்டு கொண்டுருக்கிறார்.

லூக்கா நற்செய்தியாளர் இருமுறை இயேசு அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்க மக்களை அனுப்புவதை பதிவு செய்து இருக்கிறார். முதலாவது லூக்கா 9-ம் அதிகாரத்தில் 12 சீடர்களையும் லூக்கா 10-ம் அதிகாரத்தில் 72 சீடர்களையும் அனுப்புகின்றார். ஆனால் மத்தேயு நற்செய்தியாளர் 12 சீடர்களை இயேசு நற்செய்தி அறிவிக்க அனுப்புவதைமட்டும் தனது நூலில் பதிவு செய்திருக்கிறார். மத்தேயு நற்செய்தியாளர் தனது நற்செய்தி நூலை யூதமக்களுக்கென எழுதினார். மத்தேயு 10:6-ல் பார்க்கிறோம்

வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடம் செல்லுங்கள் என்று கூறுவது இதற்கு சாட்சியாக அமைகிறது. ஆனால் லூக்கா நற்செய்தியாளர் நற்செய்தியை ஒருகுறுகிய வட்டத்திற்குள் குறிப்பிட்ட இனத்திற்கு என்று சுருக்கிகொள்ளாமல் இயேசுவின் உயிருள்ள வார்த்தைகளை அனைவருக்கும் எடுத்துச் செல்கின்றார்.

இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சீடர்களும் திருஅவையை வழிநடத்த அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாக பார்க்கின்றோம். அதனால் தான் இறுதி இராவுணவின் போது இதை என் நினைவாக செய்யுங்கள் என்று சொல்லி குருத்துவத்தை ஏற்படுத்துகிறார். ஆனால் 72 பேரை தேர்ந்தெடுத்து நற்செய்தி பணியாற்ற பொதுகுருத்துவத்தை உருவாக்கினார்.

எதற்காக இயேசு மக்களை தன் சீடர்களாக நற்செய்தி பணியாற்;ற அனுப்பவேண்டும்? லூக்கா 10:2ல் காண்கிறோம்; அறுவடைமிகுதி வேலையாட்களோ குறைவு. பற்றாக்குறையை அகற்றி தன்னுடைய அனைத்து மந்தைகளும் செழிப்புறச் செய்யவேண்டும் என்பதே அவரின்

நோக்கமாக இருக்கிறது. இந்த பொதுகுருத்துவத்தில் இயேசு இரண்டு வகையான விஷயங்களை எதிர்ப்பார்க்கின்றார். ஒன்று செபம் மற்றொன்று செயல்.

இன்றையநற்செய்தியின் 2-ம் வசனத்தில் அறுவடைக்கு தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுகள் என செபிக்க சொல்லிதருகின்ற இயேசு புறப்பட்டுப் போங்கள் நான் உங்களை அனுப்புகிறேன் என செயல் வடிவத்திற்கு முக்கியத்துவம் தருகிறார். குருத்துவத்திலும் பொதுக்குருத்துவத்திலும் வாழக்கூடிய ஒவ்வொருவரும் செபத்திலும் செயல்பாடுகளிலும் இணைந்து வேர்விட்டு அனைவருக்கும் நற்செய்தியை எடுத்துச் சென்று அனைவருக்கும் அனைத்துமாய் வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாட்டால் அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் வார்த்தைகளை அறிவுரைகளாய் ஏற்று முற்றும் துறந்த முனிவர்களாய் சென்ற 72 பேரும் இயேசுவே உம் பெயரைச் சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன என்று பெருமை பாராட்டும்போது இயேசு அவர்களை ஆற்றுப்படுத்துகிறார். என்னில் வேரிட்டு உள்ள நீங்கள் இன்னும் ஆழமாய் வேரிடவேண்டும்; இறைத்தந்தையின் விண்ணக மகிழ்வை ருசிக்கவேண்டும் என்று ஊக்கப்படுத்துகிறார்.

இன்றையமுதல் வாசகத்திலும் இப்படிப்பட்ட விண்ணக மகிழ்வு இறைவார்த்தையாக தரப்பட்டுள்ளது. தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல நான் உங்களை தேற்றுவேன்;ஆண்டவர் தம் ஆற்றலைத் தம் ஊழியர்களுக்கு காட்டுவார் போன்ற வார்த்தைகள் விண்ணக மகிழ்வுக்கான விண்ணகத்தில் நம் பெயர்கள் பொறிக்கப்படுவதற்கான எடுத்துக்காட்டுகளே ஆகும். தன்னுடைய வாழ்வைப்பற்றி பொருட்டுபடுத்தாமல் பிறரின் வாழ்வுக்காக முக்கியத்துவம் தந்த இயேசு தனது இன்னுயிரை அனைவருக்காகவும் பலியாக தந்தார். தனது சாவை நற்செய்தியாக மாற்றினார் அந்த நற்செய்தியை தனது சீடர்களின் வழியாக அனைவருக்கும் எடுத்து சென்றார். எவ்வாறு புனிதபவுல் தன் உடலின் தழும்புகளை தன் பணிவாழ்வில் பெற்ற பரிசாக இயேசுவின் அடிமையாக வாழ்ந்ததற்கான அடையாளமாக பார்த்தாரோ அதுபோல இறைவனால் நமக்கு அருளப்பட்ட பொதுகுருத்துவத்தை செபத்தாலும் செயல்பாட்டாலும் முன்னெடுத்து நற்செய்தி பணியாற்றும் போது இயேசுவின் பணிதிட்டம் நம்மில் செயலாக்கம் பெறும்.

– ஆமென்





# புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா

தி.ப. 10:24-35, எபே. 2:19-22, யோவா. 20:24-29

**03-07-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்று அறிக்கையிட்டு விசுவாசத்துடன் வாழும் வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் புனித தோமையார் பெருவிழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இந்தியாவின் அப்போஸ்தலரும், இந்தியக் கிறிஸ்துவர்களின் தந்தையுமான புனித தோமாவின் பெருவிழாவினைக் கொண்டாடி மகிழத் தாய் திருச்சபை இன்று நம்மை அழைத்துள்ளது.

தூய தோமா இயேசுவின் காயங்களை தொடுகிறார். இந்த தொடுதல் நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்ற ஆழமான மறை உண்மைகளை மலரவைக்கிறது. இதுவே இன்று நம் விசுவாச அறிக்கையாக மணம் வீசுகிறது.

புனித தோமா ஒரு வலுவான நம்பிக்கையாளர். இயேசுவின் மேல் அளவில்லாத பற்று கொண்டிருந்தவர், துணிச்சல் மிக்கவர். நாம் விண்ணரசை அடைய இயேசுதான் வழி என்ற சத்திய உண்மையை இந்த உலகிற்குத் தந்தவர். இறுதியில் இயேசுவுக்காக சாட்சிய வாழ்வு வாழ்ந்து தனது இரத்தத்தைச் சிந்தி தனது இன்னுயிரை ஈந்தவர்.

தோமையாரின் இரத்தம்தான் இந்திய கிறிஸ்துவ விசுவாசிகளின் வித்து என்பதை உணர்ந்து, அவரைப் போல் இறைமகன் இயேசுவை ஆண்டவராகவும், கடவுளாகவும் ஏற்று அறிக்கையிட்டு அதன்படி வாழும் வரம் வேண்டுவோம்.

ஆதவன் ஒளி வீசாத போதும் அதனை நான் நம்புகிறேன்
அன்பை உணராத போதும் அதனை நான் நம்புகிறேன்
ஆண்டவன் மவுனம் காக்கும்போதும் அவரை நான் நம்புகிறேன்
என்ற நம்பிக்கையுடன் இருத்திருப்பலியில் பங்கெடுப்போம்.
அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்று வாழ்வோம்.

## முதல் வாசக முன்னுரை

யாரையும் தீட்டுள்ளவர் என்றோ, தூய்மையற்றவர் என்றோ பாரபட்சம் பார்க்கக் கூடாது என்று சமத்துவத்திற்கு சான்று பகிர்கின்றது இன்றைய முதல் வாசகம். கடவுளின் செயல்பாடுகள் எப்படிப் பட்டது? அவருக்கு ஏற்புடையவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கு விடை தரும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாம் இறைச் சமூகத்தைச் சேர்ந்த இறைமக்கள் என்று சான்று வழங்கு கின்றது இன்றைய இரண்டாம் வாசகம். புனித தோமா போன்ற திருத்தூதர்களை அடித்தளமாகவும், இயேசுவை மூலைக் கல்லாகவும் கொண்ட கூட்டம் நாம் என்ற உயர்ந்த அந்தஸ்த்தை வழங்குகின்ற இவ்வாசகத்தை மகிழ்வுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அருளின் ஊற்றான இறைவா உம் அழைப்பை ஏற்று, உம் திருப்பணிக்காய் தம்மையே முழுமையாய் அர்ப்பணித்த உம் திருஅவையின் தலைவர் எம் திருத்தந்தை பிரான்சிஸ், எங்கள் ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், குருக்கள், அருட்கன்னியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். உமது மீட்பை எடுத்துரைக்கும் கருவிகளாக இருக்கும் இவர்கள், தங்கள் திருப்பணியில் மன உறுதியோடு உழைக்க அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாகத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நம்பிக்கையின் நாயகனே இறைவா, கண்ணால் கண்டால்தான் நம்புவேன் என்று இராமல், உயிர்ப்பின் அனுபவம் பெற்றவுடன் உம்மிடம் சரணடைந்த தோமாவைப்போல் உம்மில் நாங்கள் உறுதியான விசுவாசத்துடன் வாழவும், உம்மில் சரணடைந்து உம் திருவுளத்தை நிறைவேற்றி வாழ்ந்திடவும் அருள் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அன்பு இறைவா எம் பங்கில் அன்பியங்களையும், அன்பியப் பொறுப்பாளர்களையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி அன்பிய இறைமக்களை சிறப்புடன் ஒருங்கிணைத்து, பங்கு குருவுடன் இணைந்து பங்குப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்படவும், ஆன்மீகத்திலும், இறைவார்த்தை பகிர்தலிலும், பிறரன்பிலும் அன்பிய மக்கள் நிலைக்கும் வண்ணம் வழி நடத்தும் வல்லமையை அவர்களுக்கு தந்தருள வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உலகத்தின் முதல் தொழிலாளியான அன்பு இறைவா, உமது படைப்புத் தொழிலின் பங்காளிகளாய் விளங்கும் எம்மையும், நாங்கள் மேற்கொள்ளும் எம் தொழிலையும் நிறைவாய் ஆசீர்வதியும். நோவா ஞானியின் நூதனக் கப்பல் நொறுங்கிவிடாமல் காத்தது போல் எங்கள் தொழிலையும் பாதுகாறும். அது மென்மேலும் வளர்ந்து செழிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்



**வாழ்ந்திட உலகை வைத்தாய் மானுடப் பிறவி வைத்தாய்**
**சூழ்ந்திடச் சபைகள் வைத்தாய் தோத்திரம் செய்தே உன்பால்**
**ஆழ்த்திடச் சிலுவைக் கோலம் அன்புடன் வைத்தாய்**
**வீழ்ந்திடல் எற்றுக்கு இங்கே விமலனே போற்றி போற்றி**

இறைவனே மக்கள் வாழ்ந்திட உலகைப் படைத்தாய். அவ்வுலகில் மனிதப் பிறவியை உண்டாக்கினீர். அந்த மனிதனைக் காக்கச் சூழ்ந்திருக்குமாறு திருச்சபைகள் தோன்றச் செய்தாய். அத்திருச்சபைகள் உம்மை வாழ்த்தி அன்பினில் சூழ்ந்திடச் சிலுவைக் காட்சியை தியாக சின்னமாக்கினீர். இத்தனையும் கண்ட மனிதன் இவ்வுலகில் குற்றத்தில் வீழ்ந்து அழிவது எதற்காக? வணக்கம் வாழ்க.

தோத்திரம் – வாழ்த்து, கோலம் – காட்சி, விமலனே – இறைவனே.



# வத்திக்கான் செய்திகள்

### திருஅவையில், திருஅவையோடு எப்போதும் நற்செய்தியை அறிவியுங்கள்

ஜூன் 27, இத்திங்களன்று, வத்திக்கானின் திருத்தந்தை புனித 6ம் பவுல் அரங்கத்தில் 5,500 பேரைச் சந்தித்து அந்நேரத்தில் தன் மனதில் எழுந்த எண்ணங்களை பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருமுழுக்கு அடையாளத்தால் உருவாகின்ற குழுமம், ஒரு புதிய திருஅவையாக உள்ளது. அது தன் சொந்த கலாச்சாரத்தில் தனது வழியில் வளருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

திருத்தூதர்களும் சீடர்களும், இயேசுவின் கட்டளையைக் கேட்ட நாள் முதல், இயேசுவிடமிருந்து பெற்ற வல்லமையோடு நற்செய்தி அறிவித்து திருமுழுக்கு கொடுத்துவந்தனர் என்றும், அவ்வல்லமையை அவர்கள் தூய ஆவியாரிடமிருந்து பெற்றனர் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

### செயல்களில் மகிழ்ச்சியுடனும் உறுதியுடனும் இருங்கள்

ஸ்பெயினில் காரித்தாஸ் அமைப்பு தொடங்கப்பட்ட 75 ஆண்டை கொண்டாடும் நிலையில் ஸ்பெயின் காரித்தாஸ் தலைவர் அவர்களுக்கு சந்திப்பு மற்றும் தொண்டு கலாச்சாரத்தின் பாதையில் நடக்கவும், நமக்கு நெருக்கமில்லாதவர்களுடன் வேலை செய்யவும் உலகளாவிய நட்புடன் செயல்படவும் நாம் தயாராக இருக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளர்.

ஏழைகளும் புறந்தள்ளப்பட்டோரும் நம் கதவைத் தட்டும் வரை நாம் காத்திருக்க கூடாது, மாறாக, நாமே அவர்களைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்றும், அவர்களின் நன்மையையும் முழு வளர்ச்சியையும் தேட வேண்டும் என்றும், அவர்களின் மனிதமாண்பு மற்றும் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### இளையோரே, வருங்காலத்தின் நம்பிக்கை தூதர்களாக இருங்கள்

ஜூன் 27, இத்திங்கள் முதல் ஜீலை 3 வருகிற திங்கள் வரை நடத்துகின்ற முதல் உலக இளையோர் மாநாட்டில் இளையோர் வருங்காலத்தின் நம்பிக்கை மற்றும், மறுபிறப்பின் தூதர்களாக இருப்பார்கள் என்று தான் நம்புவதாக இளையோர் பிரதிநிதிகளிடம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மேலும் முதல் விடுமுறை நாள்களை நல்ல மற்றும் பொறுப்புள்ள முறையில் செலவழிப்பது நல்ல வாழ்வு முன்வைக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கு தன்னையே தயாரிக்க உதவும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பொதுக்காலத்தின் 14–ம் ஞாயிறு

### 03.07.2022 – ஞாயிற்றுக்கிழமை
**புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் விழா**

முதல் வாசகம் : திப. 10 : 24-35
இரண்டாம் வாசகம் : எபே. 2 :19-22
நற்செய்தி வாசகம் : யோவா 20 : 24-29

### 04.07.2022 – திங்கள்கிழமை
முதல் வாசகம் : ஓசே 2 : 14-16, 19-20
நற்செய்தி வாசகம் : மத். 9 : 18-26

### 05.07.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : ஓசே. 8 : 4-7, 11-13
நற்செய்தி வாசகம் : மத். 9 : 32 - 38

### 06.07.2022 – புதன்கிழமை
முதல் வாசகம் : ஓசே. 10 : 1-3,7-8, 12
நற்செய்தி வாசகம் : மத். 10 : 1-7

### 07.07.2022 – வியாழக்கிழமை
முதல் வாசகம் : ஓசே. 11 : 1-4, 8-9
நற்செய்தி வாசகம் : மத். 10 : 7-15

### 08.07.2022 – வெள்ளிக்கிழமை
முதல் வாசகம் : ஓசே. 14 : 1-9
நற்செய்தி வாசகம் : மத். 10 : 16-23

### 09.07.2022 – சனிக்கிழமை
முதல் வாசகம் : எசா 6 : 1-8
நற்செய்தி வாசகம் : மத். 10 : 24-33

*Saint Thomas, the Apostle,*

*pray for the faithful who are overcome with doubts in their lives today. Help us to abandon ourselves to JESUS by believing in Him without seeing Him.*

*Amen.*




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.**

அதிகாரம் 14
ஒழுக்கமுடைமை
குறள் - 140

**பொருள் :** உலகத்தாரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர் பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவார். அதாவது உலகத்தோடு ஒத்து வாழ்தலாகிய ஒழுக்க நெறியைக் கல்லாதவர் என்னதான் நிறைய கற்றிருந்தாலும் அவர் அறிவில்லாதவரே என்கிறார் வள்ளுவர்.

ஒழுக்கம் என்பது தனக்கும் பிறருக்கும் துன்பம் தராமல் நடப்பதும், நடந்ததை நடந்தபடி சொல்வதும் ஆகும். பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றி சொல்வதை விட தன்னிடம் அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். பக்தி என்பது தனிச்சொத்து; ஒழுக்கம் என்பது பொதுச்சொத்து.

அறிவு இல்லாத போது புத்திசாலித்தனம் இழக்கப்படுகிறது; புத்தி இல்லாத போது ஒழுக்கம் இழக்கப்படுகிறது; ஒழுக்கம் இல்லாத போது ஆற்றல் முழுவதும் இழக்கப்படுகிறது; ஆற்றல் இல்லாத போது பணம் முற்றிலும் இழக்கப்படுகிறது என்கிறார் ஜோதிராவ் புலே.

உலகத்திற்கு பொருந்தாத தீய கருத்துகள் தீய உணர்வுகளை எழுப்புகின்றன; தூய்மையற்ற பேச்சுகளுக்கு இடம் உண்டாக்குகின்றன; தீய செயல்களுக்கும் காரணமாகின்றன. இவை உடலையும் மனத்தையும் நலிவுறச் செய்து ஒழுக்க நடையில் தூய்மை மேன்மை எனும் நற்பண்புகளை அழித்துவிடுகின்றன.

பிறன் மனைவியை நஞ்சு என்று கருதுவது இனிமையானது என்று இனியவை நாற்பது பாடல் கீழ்க்காணும் பாடல் வரிகளில் கூறுகிறது:

தடமென் பணைத்தோள் தளறிய லாரை
விடம் என்று உணர்தல் இனிது.

மேலும் முன்பு தன்னிடம் வைத்த அடைக்கலப் பொருளை அறிவார் யாருமில்லை என்று அபகரிக்கக் கூடாது என்பதை நியாய சபையின் கண் ஓரஞ் சொல்லாத மாண்பு இனிது என்றும் இனியவை நாற்பது கூறுகிறது.

திருவிவிலியத்தில் சாலமோனின் ஞான நூல் 10 ஆம் அதிகாரம் 6:7,8 வசனங்களில் ஒழுக்க சீர்கேட்டினால் அழிந்த சோதோம், கொமோரா பட்டணங்களின் அழிவைப் பற்றிக் கூறுவதை வாசிக்கிறோம்.

இறைப்பற்றில்லாதவர்கள் அழிந்தபோது ஞானம் நீதிமானைக் காப்பாற்றியது. ஐந்து நகர்கள்மீது இறங்கி வந்த நெருப்பிலிருந்து அவரும் உயிர் தப்பினார். அவர்களது தீயொழுக்கத்துக்குச் சான்றாக அந்த நகரங்கள் புகை உமிழும் பாழ்வெளியாக மாற்றப்பட்டன; அங்குச் செடிகள் என்றுமே கனியாத காய்களைக் கொடுக்கின்றன; பற்றுறுதியில்லா ஆன்மாவின் நினைவுச் சின்னமான உப்புத்தூணும் அங்கேதான் நின்று கொண்டிருக்கிறது. அவர்கள் ஞானத்தை ஒரு பொருட்டாகக் கருதாததால் நன்மையைக் கண்டுணர இயலாமற்போனார்கள்; மேலும் தங்கள் அறிவின்மையின் அடையாளத்தை மனித இனத்திற்கு விட்டுச் சென்றார்கள். அதனால் அவர்கள் செய்த தவறுகள் புலப்படாமற் போகா. (சால. ஞா. 10:6இ7 ரூ 8)

இறைப்பற்று எப்பொழுதுமே நல்லொழுக்கத்தைத் தரும். ஆனால் இறைப்பற்று எவரிடம் இல்லையோ

அவரிடம் ஒழுக்கமும் இராது. செல்வமும், கல்வியும் அவர்களோடு இருந்தாலும் ஒரு பயனுமே தராது.

மதிகெட்ட நெறி பிறழ்ந்த மனிதர்கள் மூடத்தனமானவற்றை நினைக்கிறார்கள் என்று சீராக் ஆகமம் 16 ஆம் அதிகாரம் இறை வசனம் 23 நமக்கு கூறுகிறது.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பல வல்ல செயல்களை நிகழ்த்தினார். அங்கு கற்றறிந்தவர்கள் ஏராளம். ஆனாலும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் நடக்கவில்லை; மனம் மாறவில்லை என்பதை மத்தேயு 11: 20 முதல் 24 வசனங்களில் வாசிக்கிறோம்.

இயேசு வல்ல செயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார்.

கொராசின் நகரே ஐயோ! உனக்குக் கேடு! பெத்சாய்தா நகரே ஐயோ! உனக்குக் கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர். தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையை விட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். கப்பர்நாகுமே நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னிடம் செய்யப்பட்ட வல்ல செயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் அது இன்றுவரை நிலைத்திருக்குமே!

தீர்ப்பு நாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையை விட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். (மத்தேயு நற்செய்தி 11: 20-24)

உலகத்தோடு ஒத்து வாழாத தீயவர்கள் கடவுளின் பார்வைக்கும் ஏற்புடையவர்கள் அல்ல; அவர்கள் அழிவுக்கு உரியவர்களே என்பதை எடுத்துரைக்கிறது இவ்வசனங்கள்.

நீங்கள் எந்த நகருக்கோ ஊருக்கோ சென்றாலும் அங்கே உங்களை ஏற்கத் தகுதியுடையவர் யாரெனக் கேட்டறியுங்கள். அங்கிருந்து புறப்படும்வரை அவரோடு தங்கியிருங்கள்.

அந்த வீட்டுக்குள் செல்லும்பொழுதே வீட்டாருக்கு வாழ்த்துக் கூறுங்கள். வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால் நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவர்கள்மேல் தங்கட்டும்; அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்தால் அது உங்களிடமே திரும்பி வரட்டும். உங்களை எவராவது ஏற்றுக் கொள்ளாமலோ நீங்கள் அறிவித்தவற்றுக்குச் செவிசாய்க்காமலோ இருந்தால் அவரது வீட்டை அல்லது நகரைவிட்டு வெளியேறும்பொழுது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். தீர்ப்பு நாளில் சோதோம் கொமோராப்பகுதிகளுக்குக் கிடைக்கும் தண்டனையை விட அந்நகருக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (மத்தேயு நற்செய்தி 10:11-15) என்கிறார் நம் ஆண்டவர்.

இவற்றை அறிந்த நாம் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து என்றும் எல்லாவற்றையும் ஆண்டவரை முன்வைத்து செயல்படக்கூடிய பிள்ளைகளாக நற்சான்றுகளாக வாழ்ந்து சாட்சி பகர்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**

